விலை ரூபா 1—25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 சித்திரை 28 ஷஃபா 19 இதழ் 89
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 10-5-1985

## ஜனாதிபதி கருத்து:
### ஆலம்கான் ஆட்சேபம்

(புதுடில்லி)

இலங்கையின் சர்வதேச எல்லையாக இந்தியாவின் சில பகுதிகளையும் சேர்த்துக் கொள்ள முயற்சி செய்வதாக இலங்கை ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துள்ள கருத்துக்கு இந்திய வெளியுறவு இணை அமைச்சர் ஜனாப் குர்ஷித் ஆலம்கான் ராஜ்சாபாவில் நேற்று கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

''இந்து சமுத்திரத்தில் வல்லரசுகள் இராணுவத்தளங்களை அமைத்து வருவது இப்பிராந்தியத்திலுள்ள சிலநாடுகளுக்கு தெரிந்தே நடக்கின்றன. இந்தியாவும் அதனோடு ஒத்த கருத்துள்ள நாடுகளும் அடுத்த ஆண்டு 'இந்து சமுத்திரம்' சம்பந்தமான மாநாடு நடத்தவுள்ளன'' என்றும் அவர் தெரிவித்தார்.

## ஒருகோடி கையொப்பம்

[சென்னை]

இலங்கை தமிழ் போராளிகளின் முயற்சிக்கு ஆதரவு கோரித் தமிழ்நாட்டில் ஒரு கோடி மக்களின் கையொப்பம் பெறப்பட்டுள்ளது என்று நேற்றுச் சென்னையில் கூடிய தி மு. க. மாவட்ட நிர்வாகிகள் குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழர் பிரச்னையில் சாதகமான தீர்வை இந்தியா காணவேண்டுமென்பதற்காகவே தி மு. க. தொண்டர்கள் ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றார்கள்.

## பி.டி.ஐ.நிருபர் கைது! சத்வால் பயணம் ரத்து!

(கொழும்பு)

இலங்கையிலுள்ள பி. டி. ஐ (பிறஸ் ட்றஸ்ட் ஒவ் இந்தியா) செய்தி நிறுவன நிருபர் திரு. கிஷ்ணன் ஆனந்த் நேற்றுக் கைதுசெய்யப்பட்டு, றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

இதன் எதிரொலியாக நேற்று நண்பகல் இந்தியா புறப்படவிருந்த முன்னாள் இந்திய உயர் ஸ்தானிகர் திரு எஸ். ஜே. எஸ். சத்வால் நேற்று தமது பயணத்தை ஒத்திவைத்துள்ளார்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன நிகழ்த்திய ஒரு உரையைத் திரித்து செய்தி வெளியிட்டதாக மேற்படி நிருபர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதுவரை இவர் நாட்டைவிட்டு வெளியேற அனுமதிக்கப்படமாட்டார் என்றும் நேற்று அரசாங்கம் அறிவித்திருந்தது.

[6-ம் பக்கம் பார்க்க]

## தெற்காசியபிராந்தியநாடுகள் அமைப்பு விவகாரம்

சரத் · ஐ.நா.விலிருந்து இலங்கை விலகுமா? கேள்வி

லக்ஷ்மன் · மனித உரிமை அமைப்பில் இருந்தும் இலங்கை விலகுமா? கேள்வி

# அரசு தீர்மானிக்கவில்லையாம்!

(கொழும்பு)

**தெற்காசியப் பிராந்திய நாடுகள் ஒத்துழைப்பு அமைப்பில் இலங்கையின் பங்கு தொடர்பான விவகாரம் மீது பாராளுமன்றத்தில் நேற்றுச் சூடான விவாதம் நடந்தது.**

''தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு நாடுகள் அமைப்பிலிருந்து இலங்கை விலகுவதாக இருந்தால் ஐ. நா. அமைப்பு, அணி சேரா இக்கம் ஆகிய அமைப்புகளிலிருந்தும் இலங்கை விலகிக்கொள்ளலாமே. ஏனெனில் இந்த இருஅமைப்பிலும் இந்தியா மிகவும் சக்தி வாய்ந்த நாடாகவே இருக்கிறது'' என்று கலவான எம். பி. திரு. சரத் முத்தெட்டுவேகம நேற்று பாராளுமன்றத்தில் அச்சம் தெரிவித்தார்

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மகாநாட்டில் இலங்கை கலந்து கொள்வது தொடர்பானவிவாதத்தில் பிரதி வெளிநாட்டமைச்சர் திரு. ஜிரோன் பெர்னாண்டோ பதிலளித்துக் கொண்டிருக்கையில் குறுக்கிட்டுப் பேசிய கலவான எம். பி. மேற்படி தெரிவித்தார்

அவர் தொடர்ந்து பேசுகையில்; ''தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு நாடுகள் அமைப்பில்இந்தியா மிக சக்திவாய்ந்த நாடாக இருக்கிறது, இது

(6ம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகர் நேற்று..

(யாழ்ப்பாணம்)

யாழ் நகர் நேற்று நண்பகலுடன் அடங்கிவிட்டது!

காலையில் திறந்திருந்த கடைகள்யாவும், நகரில் ஏற்பட்ட பதட்ட நிலையைத் தொடர்ந்து நண்பகலுக்குமுன்னர் பூட்டப்பட்டன.

நீதிமன்ற விசாரணைகள்

(6ம் பக்கம் பார்க்க)

## ஒருவர் பலி! பலர் படுகாயம்

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் வாடகைக்கார் உரிமையாளர் ஒருவர் பலியானார்; நால்வர் படுகாயமடைந்தனர்.

[6ம் பக்கம் பார்க்க]


## உருக்கமான வேண்டுகோள்!

**சம்பந்தப்பட்டவர்களுக்கு ஒரு தயவான கோரிக்கை:**

எனது கணவரையும் (எஸ். வி. முருகேசு) அப்பாவையும் எப்படி அழைத்துச் சென்றீர்களோ அதே மாதிரி மிக விரைவில் திருப்பிக் கொண்டுவந்து ஒப்படைக்குமாறு மிகவும் தயவாக வேண்டிக்கொள்கின்றோம்.

இங்ஙனம்

மனைவி, மக்கள்.

3206


## 3 தாக்குதல் சம்பவம்

(கொழும்பு)

வட பகுதியில் நேற்று இடம்பெற்ற மூன்று வெவ்வேறான சம்பவங்களில் இராணுவ வீரர்களும் தீவிரவாதிகளும் பலியாகியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அதே நேரத்தில் நேற்று அதிகாலை கொக்காவில் இராணுவ முகாம் மீது தீவிரவாதி

(5ம் பக்கம் பார்க்க)

## இன்று கடையடைப்பு!

### தலைவரை விடுவிக்குமாறு வர்த்தக சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வர்த்தகர்கள் கடத்திச் செல்லப்படுவதை வன்மையாகக் கண்டித்தும், கடத்தப்பட்ட யாழ் வர்த்தக சங்கத் தலைவர் திரு. எஸ் வி முருகேசுவை எவ்வித நிபந்தனையுமின்றி உடனடியாக விடுதலை செய்யுமாறும் கோரி இன்று வெள்ளிக்கிழமை வர்த்தகர்கள் யாவரும் கடை

(5ம் பக்கம் பார்க்க)

## ''எங்கள் நாட்டில் சிறுபான்மையினர்
# சுயாட்சியுடன் ஒற்றுமையாக வாழ்கிறார்கள்!''
### 'ஈழநாடு'க்கு ஈராக் தூதுவர் விளக்கம்

(இ கந்தசாமி)

''எங்கள் நாட்டிலும் ஒரு சிறுபான்மை இனமக்கள் சுயாட்சி கோரி போராட்டம் நடத்தினார்கள். இறுதியில் அவர்களது போராட்டம் வெற்றி பெற்று அவர்கள் தற்போது ஈராக் நாட்டில் சகல உரிமைகளுடன் பெரும்பான்மை இனத்துடன் சமமாக வாழ்ந்து வருகின்றார்கள்''

இவ்வாறு இலங்கைக்கான ஈராக் தூதுவர் ஜனாப் சபா தலத் தெரிவித்துள்ளார்.

ஈராக் தலைநகர் பக்தாத்தில் நடைபெற்ற இரண்டாவது இஸ்லாமிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விளக்கும் முகமாக ஈராக் தூதுவராலயத்தில் நடைபெற்ற விஷேட நிகழ்ச்சியில் கலந்து கொண்ட எமது 'ஈழநாடு' நிருபரிடம் அவர்

(6ம் பக்கம் பார்க்க)

# விளம்பரம்

## விற்பனைக்கு

கோப்பாய்தெற்கு இருபாலை கழாவடியிலுள்ள 3 1/8 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பர இல:3181 C/O, ஈழநாடு,யாழ்ப்பாணம். 3181

புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட மூன்றுதிறன் கூடிய பம்பாய் வெங்காயவிதை விற்பனைக்குண்டு. விலைவிவரங்களுக்கு மொத்த... ஜெயார் மெற்றல் வேக்ஸ், 107, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 3191

நிரந்தர வியாதிகளுக்கு உகந்த "கோதுமை அரிசி" மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். M G M and Stores, 777, காங்கேசன்துறை வீதி and 208, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22611. (2820)

புதியவீடு 3 படுக்கை அறைகள் குசினி, சாலை, குளி அறை தற்காலிக வசதிகளுடன் 1 பரப்பு 14 குளிகள் சுற்றிவர மதில் 435, கஸ்தூரியார்வீதி, கில்னர் ஒழுங்கை தொலைபேசி: 22029. 187, 3-ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். 3194

ஒரு வயது பெண் அல்சேஷன் நாய் மற்றும் சில்லறை குசினி தளபாடங்கள்விற்பனைக்குண்டு தொடர்பு 187, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 22029 (3184)

## முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திச் சபை

## கேள்வி விளம்பரம்

முல்லைத்தீவு பட்டின எல்லைக்குள் அமைந்திருக்கும்,சின்னத்தான் காட்டுக் கிராமத்திற்கான மின்சார விநியோகத்திற்கான கேள்விகள் அரசாங்கத்தில் மின்சார வேலைகளுக்காக பதிவு செய்யப்பட்டிருக்கும் ஒப்பந்தகாரரிடமிருந்து முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திச் சபையின் செயலாளரினால் கோரப்படுகின்றன.

கேள்விப்படிவங்கள் 06-06-1985ந் திகதி பகல் 12-00 மணிவரை மீளப்பெறக்கூடிய ரூபா 5000/-க்கு வங்கி உத்தரவாதத்துடனோ காசோலையும் கேள்விப்படிவத்திற்கான ரூபா 50/- செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

சகல கேள்விகளும் அரக்கு முத்திரையிடப்பட்டுப் பதிவுத் தபால் மூலம் 07-06-1985ந் திகதி பகல் 12-00 மணிக்கு முன்னர் செயலாளருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது இதற்காக மாவட்ட அபிவிருத்திச் சபையின் தலைமையலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் போடப்படல் வேண்டும். கடிதத்தின் இடதுகரை மேற்பக்க மூலையில் கேள்விக்கான பெயர் குறிக்கப்படல் வேண்டும்.

கிடைக்கப்பெற்ற கேள்விகள் 07-06 1985ந் திகதி பிற்பகல் 2-00 மணிக்கு கச்சேரியில் உள்ள, மாவட்ட செயலாளரின் காரியாலயத்தில் திறக்கப்படும்.

இது சம்பந்தமாக மேலும் வேண்டிய விபரங்களை அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

க. பொன்னம்பலம்,
பதில் செயலாளர்,
மாவட்ட அபிவிருத்திச் சபை,
கச்சேரி,
முல்லைத்தீவு. 3179

## விற்பனைக்கு

யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் பாதுகாப்பான வட்டாரத்தில் சகல நவீன வசதிகளுடனும் (குளிரூட்டப்பட்ட நூலறை, நீச்சல்தொட்டி முதலியன உட்பட), வாகனம், சகல தளபாடங்களுடனும் பெரிய வீடு விற்பனைக்கு அல்லது குத்தகைக்குண்டு விபரங்களுக்கு: பெட்டி இல: 3173, ஈழநாடு, மேற்பார்த்து. 3173

## தவறிவிட்டது

முருகேசு இராமநாதன், கொத்துவரதன் என்பவரின் அடையாள அட்டை நல்லூரில் (இராசாவின் தோட்டம், வைமன் வீதியில்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 124, இராசாவின் தோட்டம், நல்லூர், யாழ்ப்பாணம் விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 3196

## தேவை

யாழ். நகர எல்லைக்குள் மினி சினிமா தியேட்டர் ஆரம்பிப்பதற்கு (சுமார் 100பேர்) பார்க்கக் கூடிய விஸ்தீரணமுள்ள கட்டிடம் தேவை தொடர்பு கொள்ளவும் விளம்பர இலக்கம் 3199. C/O, ஈழநாடு, யாழ்ப்பாணம். 3199

## சேதமடைந்தது

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இந்துவீதி பின் பகுதியில் நேற்று நண்பகல் லொறியொன்று பாதையை விட்டுவிலகிச் சென்று மோதியதால் கட்டடம் சிறிது சேதமடைந்துள்ளது. (க)

## மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கம்

## வெற்றுச் சாக்கு விற்பனை

மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கத்தில் வெற்றுச் சாக்குகள் (5018), வெற்றுப் பைகள் (345) விற்பனைக்குண்டு. சங்கத்தால் விநியோகிக்கப்படும் கேள்விப் பத்திரத்தை ரூபா 200/- முற்பணம் செலுத்திப் பூரணப்படுத்தி 14-5-85 பி.ப. 12-00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அரக்கு முத்திரையிடப்பட்ட பதிவுத் தபால் மூலம் 'பொது முகாமையாளர், மானிப்பாய் கோவில்பற்று ப.நோ. கூ. சங்கம், மானிப்பாய்' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பொதுமுகாமையாளர்.

7-5-85 3195



## 31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர் சரவணை சுப்பிரமணியம்
(அதிபர்)

அன்னை மடியில்:
28 10 1926
ஆண்டவன் அடியில்:
10-4-1985

அன்பைக் குடைந்து — அதில்
அறிவைக் கலந்து — எம்
துன்பம் துடைத்த கோமான்
உன்னைப் பிரிந்து — மனம்
இன்னல் விரிந்து - தினம்
அனலிடைப் புழு லானோம்.

துயரால் துடிக்கும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள்.
"திருப்பதி", மட்டுவில் வடக்கு. [3198]

## ஓராண்டு நினைவு அஞ்சலி

அமரர் திருமலை இரா. ஐயச்சந்திரன்



தோற்றம்:
6-7-59

மறைவு:
24-4-84

திதி: 12-5-1985

மாசிலக் குரூர்லதகை மானிலத்தில் உயர்த்திவிட
ஆசிரியப் பணியேற்று ஆற்றினாய் பல சேவை
இளைஞர் மன்றத்தின் இணையற்ற சேவகனாய்
துணிவுடனே செயற்பட்ட தூயமனத்தோனே
காந்திய வழிதனிலே காண்போமமைதியென்று
சார்ந்தாய் அவ்வழியே சாடினாய் தீமைதனை
தொழிலாளர் துயர்கண்டு தொழிற்சங்க வாதியானாய்
விடுதலை வேட்கைகொண்டு விடுதலையை
வெளியிட்டாய்
அஞ்சாமை யென்பதையே அணிகலனாய் பூண்டவனே
வஞ்சவுலகிலெமை வாடவிட்டு பாதிவழி
சென்றுவிட்டாய் பார்த்தனே நாம் தேறுவதுஎந்நாளோ.
துயர் உற்றோர் துயர் துடைக்க
துணிவுடனே செயல் பட்டாய்
அச்சம் என்பதையே துச்சமென மதித்தாய்
அஞ்சாமை என்பதையே உடைமையெனக்
கொண்டாய்
பலசெயல்கள் புரிகையிலே பாதிவழி மறைந்தனையே
கலங்கிறோம் துயருற்றோம் காலம் உனை
மறைத்ததுவே.

அன்பு பெற்றோர்சித்தப்பா, சின்னம்மா, சகோதர சகோதரிகள், மைத்துனர், மைத்துனிகள், பெருமகன், மருமக்கள், நண்பர், நண்பிகள், உற்றார், உறவினர், மாமாமார், மாமிமார். (3182)

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட
நீதிமன்றம்

வட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற துரைச்சாமி முத்தையா என்பவரின் மரணசாதன மரணச் சொத்துக்களின் விடயத்தில்
- மரணமெய்தியவர்.

மரண சாதன நியாயாதிக்கம் } இல: ரி/234

துரைச்சாமி முத்தையா
கைம்பெண் நாகம்மா,
மூளாய் றோட்,
வட்டுக்கோட்டை.
— மனுதார்

எதிராக

முத்தையா திருச்செல்வம்,
மூளாய் றோட்,
வட்டுக்கோட்டை,
- எதிர் மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரண மெய்தியவரின் மரணச் சொத்துக்களை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985-ம் ஆண்டு ஆனி மாதம் 12-ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1985-ம் ஆண்டு பங்குனி மாதம் 28ந் திகதி

கோட்டுக்கட்டளைப்படி

ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்

தயாரித்தவர்:
க. குணரத்தினம்,
மனுதாரின் சட்டத்தரணி.
3200

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட
நீதிமன்றத்தில்

இல. T 3828

காலஞ்சென்ற மரணசாதனமின்றி இறந்த வட்டுக்கோட்டை சரவணமுத்து மகோற்கடன் மரணச்சொத்துக்கள் விடயமாக
— இறந்தவர்

(1) துரையப்பா பாக்கிய நாதன், பெண்
(2) மீனம்பிகை பாக்கிய நாதன், மூளாய் றோட்டு, வட்டுக்கோட்டை.
— மனுதார்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதெனஇத்தால் அறிவிக்கப்படுகிறது

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985-ம் ஆண்டு வைகாசி மாதம் 17-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானகட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1984-ம் ஆண்டு மாசி மாதம் 1-ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

கு. குலசிங்கம்
பதிவாளர்.

எம் கே. சுப்பிரமணியம்,
மனுதார் தரணி.
3197

## அறிவித்தல்

விடத்தல்தீவு கற்பகப்பிள்ளையார் கோவில் தர்மமடத்துக்குச் சொந்தான வண்ணார்பண்ணை மேற்கு கற்குளம் ஒழுங்கையில் அமைந்துள்ள "கற்குளங்கரையும் டள்ளுவலித்தோட்டமும்" என்னும் காணியை மேற்படி கோவில் கட்டிடம், மடம் திருத்தவேலைக்காக விற்பனவு செய்ய யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் நம்பிக்கைச்சொத்து வழக்கு இல 107ல் உத்தரவு பெற்றுள்ளேன் ஆகவே முழுமையாகவோ அல்லது பாகம் பாகமாகவோ கொள்வனவு செய்ய விரும்புவோர் கொள்வனவு செய்யும் பரப்புக்கு விலை கோரி 15-6 85க்கு முன் கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

தி. விஸ்வகுமார்
தர்மகர்த்தாவின் தத்துவகாரர்.

101, சிவன்கோவில் வடக்கு வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

7-5-1985. (3162)

## ஐந்தாண்டு நினைவஞ்சலி

திருமதி பத்மாவதி சவரிமுத்து



தாயின் மடியில்:
1934-11 01
இறைவனடியில்:
1980 05 10

அன்பின் அம்மா!
அனலிலிட்ட புழுப்போல
எம்மையெல்லாம துடிக்கவைத்து — நீங்கள்
நெடும்பயணம் சென்றதெங்கே
நீங்கள் சென்று நெடுநாட்களானாலும்
எங்கள் நெஞ்சங்கள் உம்மையென்றும்
நேசித்தும் பூசித்தும் நிற்தமே
மாறாத அன்பையும் ஆறாத துயரத்தையும்
வைத்துச் சென்ற உங்களின் ஆத்மா
இயேசுவின் திருஇருதயத்தில் என்றும்
சாந்தியடைய மன்றாடுகின்றோம்
அன்பின் அம்மாவின் பாசத்கால் துயருறும்:
கணவன், மகன், மகள், தாய், சகோதரர்கள்,
பிள்ளைகள்.

[3175]

### மணிவாக்கு

தேகத்தை ஆத்மா என்றும் மயங்கும் புத்தியே துவைதம், அது இல்லாமல்போவதே அத்வைதம்.

— ரமணமகரிஷி.

## நமது நோக்கு

### குடும்பப் பிரச்னை அல்ல

''இந்தியாவில் பலம் வாய்ந்த இராணுவம், கடற்படை எனபன இருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது'' என்று தொழிலமைச்சர் பாராளுமன்றத்தில் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

இதனை எவ்வாறு பயன்படுத்த வேண்டுமென்ற ஆலோசனையை எதிர்க்கட்சித் தலைவருக்கு வழங்கியிருக்கிறார். அது விசித்திரமானது அனுராவின் தந்தையார் எஸ். டபிள்யூ. ஆர். டி.யின் பாணியிலே அந்த ஆலோசனை அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அனுராவுக்கும் காந்தி குடும்பத்துக்கும் உள்ள மிக நெருக்கமான உறவைப் பயன்படுத்தி ''இந்தப் (எந்த?) பிரதேசத்தில் கடல் பாதுகாப்பு வலயம் ஏற்படுத்தமுடியுமானால் ஊடுருவலைத் தடுத்து சில மணித்தியாலங்களில் இலங்கை இனப் பிரச்னையை தீர்த்து வைக்கமுடியும்'' என்று அனுராவை வளைக்கிறார்.

இலங்கை அரசியல் பிரச்னை சுதந்திரத்துக்குப் பின் குடும்பப் பிரச்னையாகத் தொடர்வது கண்கூடு

இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று ஜனாதிபதி ஜெயவர்த்தன அடிக்கடி சொல்லிவந்தார். இன்று அதுபற்றி அதிக சத்தம் இல்லை அவ்வித ஆட்சி தொடரும் என்ற சந்தேகம் இல்லாமற் போகவில்லை. பண்டைய வரலாற்றிலேயே அரசர்கள் ஆட்சியில் 'குடும்பப்பிரச்னை' தலைபெடுத்திருந்தது

இன்று அவ்வித அணுகுமுறைக்கு அதிக இடம் உண்டா? மக்கள் அதிலிருந்து கணிசமான தூரத்துக்கு வந்துவிட்டனர்.

அமரர் பண்டாரநாயக்காவின் 24 மணித்தியால தனிச் சிங்களச்சட்டம் 24 வருடங்களுக்குப் பின்பும் வலுப் பெற்றிருக்கவில்லை. தமிழ் செத்துக்கெட்டுப் போகவில்லை. தமிழ் தட்டெழுத்தாளரும் சுருக்கெழுத்தாளரும் இல்லாததே பெருங்குறை.

தமிழ் தேசியமொழி என்ற அந்தஸ்தைப் பெற்றிருக்கிறது, நாட்டில் நடைமுறையில் இல்லாத போதும் ஏட்டில் இருக்கின்றதே! கோட்டிலும் உண்டு.

எனவே சிலமணித்தியாலங்களில் விடயம் முடியுமென்று ஒரு அமைச்சர் கூறுவாரானால் அது குடும்ப உறவில் உள்ள தடிப்பான நம்பிக்கையை உணர்த்துகிறது.

தனிப்பட்ட குடும்ப உறவில் இந்த நாட்டில் பல அரசியல் சாதனைகள் நடைபெற்று வந்திருக்கின்றன. இன்னும் வரவிருக்கின்றன என்பதைக் குறிப்பதே தொழிலமைச்சரின் கூற்று; இதற்கெதிராக மக்கள் சமுதாயம் விழிப்பாகவிருக்கும் தேவை அதிகரிக்கிறது.

தகப்பன் மகன், கணவன் மனைவி என்ற சங்கிலிக் கோவையில் நம்பிக்கை இழக்காத மக்கள் ஜனநாயகத்தின் உள்ளுடனைப் புரிய முடியாதவர்கள். ஆட்சி முறையில் சங்கிலி போல் தொடர்பு அவசியம். அதேபோல மாற்றமும் அவசியம்.

இந்தியாவில் தகப்பன், மகள், பேரன் என்ற சங்கிலி இல்லையா? என்பதும் கேட்கப்பட்டது, கேட்கப்படுகிறது. அந்தக் கேள்வி முட்டாள்களின் கேள்வி என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் முதலாவது பகிரங்க எதிரி இந்திரா என்ற தாற்பரியத்தில் ஒரு எழுத்தாளர் சஞ்சிகை நடத்தி வந்தார் பலரீ படித்து ரசிக்கும் சஞ்சிகை அது. கடவுள் வாக்கு மாதிரி அந்த எதிரி நீக்கப்பட்டதும், அக்கூற்று பச்சைப் பொய் என்பதை இந்திய மக்கள் உடனடியாக நிரூபித்து விட்டனர். விடுகதைகளில் அரசியல் வளர்ச்சியடைவதை நாம் சொந்த நாட்டிலே காண்கின்றோம்.

நாலு கொத்து அரிசியில் நம்பிக்கை வைத்தோ அல்லது ஒருநேர உணவுக்கு பாண் கிடைக்கவில்லைஎன்ற குறையிலோ இந்தியாவின் ஏழைமக்கள் ஆட்சியை ஏற்றுவதில் இறக்குவதில் நம்பிக்கை கொண்டவர்கள் அல்லர். இந்திராவின் இரண்டு வருட 'சர்வாதிகார' ஆட்சியில் மக்கள் தினசரி வாழ்வில் பொருளாதார திருத்தம் கண்டனர்; அதனைப் பொருட்படுத்தாமல் அவருடைய தான்தோன்றித்தனத்தைக் கண்டிக்க பொதுத் தேர்தலில் அவரைவீட்டுக்கனுப்பினர். தந்தை மகள் என்ற பேச்சுக்கு சாதாரண இந்திய வாக்காளர் இடமளிக்காத அரசியல்ஞானம் பெற்றவர்கள் உலகம் கண்டிராத இலட்சியப் பாதையில் சுதந்திரம் பெற்ற பெருமக்மக்கள்.

எனவே இலங்கை இனப் பிரச்னை இந்தியாவின் ராஜீவுக்கோ இலங்கையின் அனுராவுக்கோ ஒரு வீட்டுப் பிரச்னை அல்ல என்பது தெளிவு.

தென்பகுதி சாதாரண சிங்கள மக்கள் மனதில் இந்தியா பற்றிய அச்சத்தை அமைச்சர் ஒருவரே வெளிவெளியாகத் தெரிவிக்கிறார். ஆனால் தீர்வுக்கு உதவும் கருத்து சாதாரண சிங்கள மக்களுக்கே சிரிப்புக்கிடமானதாகத் தோன்றும்.

ஆயுதந்தாங்கிப் போராடும் தமிழ் இளைஞர்களோ இந்தியா தங்களுக்கு இவ்வாறு உதவ வேண்டுமென்று நினைக்கமாட்டார்கள். சிறிமா அம்மையார் ஒருமுறை கூறியதுபோல் தமிழ் இளைஞர்கள் தங்கள் ராணுவத் திறமையில் நம்பிக்கை கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது,

பாரதம் யாருக்கு இராணுவ உதவி வழங்கினாலும் இலங்கை விடயம் சில மணித்தியால வேலை என்பதைக்ஒத்துக்கொள்ளலாம். ஆனால் அவ்வித உதவியை ஆபத்தான நிலையில் உள்ள இலங்கைத் தமிழர்களே சிந்தனைத் திறமையால் முடியாத காரியமென்ற முடிவை ஏற்றுக்கொள்ளுவார்கள். வேறு வழி இல்லையா?

நாம் கேட்பது இந்தியாவின் மத்தியஸ்தமே; 'போரை' நிறுத்தி நியாயமான முடிவைக் கோரும் இந்தியா இங்கு தினசரி நடைபெறும் அட்டூழியத்துக்கு ஒரு சடுதியான முடிவு காண உதவுவது மனிதாபிமானத்தின் முதற் கடமை. இலங்கை அரசு கொடுக்கும் வாக்குறுதி எதுவும் தமிழ் மக்கள நம்பிக்கைக்குப் பாத்திரமல்ல.

இலங்கை அரசு பிடிவாதமாகத் தொடரும்பட்சத்தில், உலக சமுதாயத்தின் அனுதாபத்தைக் கொண்டு போர்நிறுத்தம் நிர்ப்பந்திக்கப்பட வேண்டும். இவ்விடயத்தில் இந்தியா விரைய வேண்டும.

இளைஞர் புரட்சியிலோ அரச பயங்கரவாதத்திலோ சுமுகமான முடிவு கிட்டுமென நினைத்தல் தவறு. தமிழ்ப் போராளிகள் சாதனை தமிழ்மக்களின் விழிப்புணர்ச்சியை வெளிப்படுத்தும் செயல்.

---

# டாக்டர் நீலன் நேரில்சென்றுதகவல்:
# மட்டக்களப்பில் 58 முகாம்களில் 36,093 அகதிகள் உள்ளனர்!

## மூன்றில் இரண்டு தமிழர்கள்; ஏனையோர் முஸ்லிம்கள்

[கொழும்பு]

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 58 அகதிகள் முகாம்களில் மொத்தம் 36,093 அகதிகள் உள்ளனர். இவர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் தமிழர்கள். ஏனையவர்கள் முஸ்லிம்கள். இதேபோன்று அம்பாறை மாவட்டத்தில் 20,000 அகதிகள் உள்ளனர். இதில் பெருந்தொகையானோர் தமிழர்கள் ஆவர்.

அண்மையில் கலவரங்களினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தை நேற்றுமுன் தினம் பார்வையிட்டபின்னர் அதுபற்றி விளக்கமளிக்கையில் கலாநிதி நீலன் திருச்செல்வம் மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

அவர் கலவரத்தினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளையும் சுற்றிப் பார்த்தார்.

### காரைதீவில்

''காரைதீவில் 505 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. மேலும் 240 வீடுகள் அரைகுறையாக சேதமடைந்துள்ளன. இங்கு இடம்பெற்ற கலவரங்களில் 10 கோடி ரூபா பெறுமதியான நஷ்டம்ஏற்பட்டுள்ளது. 14 பேர் பலியாகியுள்ளனர். ஒரு இந்துக்கோயில் முற்றாக சேதப்படுத்தப்பட்டதோடு அங்கிருந்த சிலைகள் யாவும் உடைக்கப்பட்டுள்ளன. இந்தக் கோயிலுக்கு மாத்திரம் 30 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது'' என்றார்.

மட்டக்களப்பில் 2039 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. ஏறுவூர் பற்றில் 1040 வீடுகளும வாடிகளும் தீக்கிரையாக்கப்பட்டன. வாழைச்சேனையில் 600 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. மேலும் உன்னச்சிமலை, நாவற்குடா, மண்முனை ஆகிய பகுதிகளிலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது

### வீடுசெல்ல விருப்பம்

அகதிகள்முகாம்களில் உள்ளவர்கள் திரும்பவும் தத்தமது வீடுகளுக்குச் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர். ஆயினும் அவர்களுக்கு அங்கு தகுந்த பாதுகாப்பு இல்லை என்பதினால் சொந்த இடங்களுக்குச் செல்லப் பயப்படுகின்றார்கள். அவ்வாறு முகாம்களைவிட்டு சொந்த இடங்களுக்கு சென்றவர்களும் பயத்தின் காரணமாக மீண்டும் முகாமுக்கு திரும்பியுள்ளனர். இந்நிலை மாற வேண்டும். இரு இனங்களும் ஒருவரை ஒருவர் காப்பாற்ற வேண்டும். தமிழர்களை முஸ்லிம்களும், முஸ்லிம்களை தமிழர்களும் பாதுகாக்கும் நிலை மட்டக்களப்பில் உருவாக வேண்டும். கிழக்கு மாகாணத்துக்குப் பொருளாதார சமூகதுறையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலை மிகவும் கவலைக்குரிய தொன்றாகும்.

### தமிழ் - முஸ்லிம் கலவரம் அல்ல

இது தமிழ்—முஸ்லிம் கலவரம் அல்ல சில திட்டமிட்ட தியசக்திகளினால் உருவாக்கப்பட்ட சதித்திட்டமாகும். 18 நாட்கள் நடைபெற்ற இந்தக் கலவரத்தை அடக்குவதற்கு அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. சம்பந்தப்பட்டவர்களுடன் நாம் பலமுறை தொடர்பு கொண்டு கலவரத்தைஅடக்குமாறு கூறினோம். ஆனால் அரசாங்கத்தின் எந்தமட்டத்திலிருந்தும் சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

### அமைதிக்குழு அமைக்க வேண்டும்

முஸ்லிம்களும்- தமிழர்களும் தம்மிடையே அமைதியைக் காப்பதற்காக குழுவொன்றை அமைத்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அகதிகள் புனர்வாழ்வு சங்கத் தலைவர் திரு. விஞயகமூர்த்தி, செயலாளர் திரு. கெங்காதரன் ஆகியோர்பாதிக்கப்பட்ட சேதங்கள் தொடர்பான மகஜர் ஒன்றை நீலன் திருச்செல்வத்திடம் கையளித்துள்ளனர்இதனை அவர் 'ரேபியா'விடம் கையளிப்பதாகக் கூறினார்

அம்பாறையில் மாவட்ட சபை உறுப்பினர்கள், திரு. விஞயகமூர்த்தி திரு. வேல்முருகு ஆகியோரையும் மட்டக்களப்பு முன்னாள் மாவட்ட சபைத்தலைவர் திரு. சம்பந்தமூர்த்தியையும் நீலன் திருச்செல்வம்சந்தித்துப் பேசினார்.

---

மதிப்புரை:

### திருக்கணித பஞ்சாங்கம் (1985—86)

குரோதன வருஷ திருக்கணித பஞ்சாங்கம் வரப்பெற்றோம். இப்பஞ்சாங்கம் வழமை போல் சகல அம்சங்களையும் நிறைத்துக்கொண்டு 98வது பிரசுரமாக வெளிவந்துள்ளது

மட்டுவிலைச் சேர்ந்த வேதாகம ஜோதிட பூஷணம் சி. சிதம்பரநாதக்குருக்கள் தமது மரபுவழியில் கணித்து இதனை வெளியிட்டுள்ளார். 112 பக்கங்களைக்கொண்ட திருக்கணித பஞ்சாங்கம் ஒன்றின் விலை 15 ரூபா மட்டுமே.

சாவகச்சேரியிலுள்ள மட்டுவில் திருக்கணித நிலையம் இப்பஞ்சாங்கத்தை வெளியிட்டுள்ளது.

ஜோதிடம் தெரிந்தவர்களுக்கும் குறிப்பாக நாள்-கோள் பார்ப்பவர்களுக்கும், கணித ஞானமுள்ளவர்களுக்கும் கையேடுபோல் வைத்திருக்கவேண்டியது பஞ்சாங்கம். இந்த நிலையில் திருக்கணித பஞ்சாங்கம் தமது கணிப்பை நிலைநிறுத்திவருவதை அதை வாங்கிப் படிப்போர் நன்கு உணருவர். — 'வாமா'

---

### கப்பலில் ரயர்கள் வந்தன

[யாழ்ப்பாணம்]

வடபகுதியிலுள்ள துறைமுகம் ஒன்றுக்கு வந்திருந்த கப்பலிலிருந்து ஏராளமான ரயர்கள் இறக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இறக்கபபட்ட ரயர்களில் அதிகமானவை பழுதடைந்தவையெனக் கூறப்படுகிறது. (மா)

---

### நாட்டில் அமைதி வேண்டி கூட்டுப்பிரார்த்தனை

[வண்ணார்பண்ணை]

நாட்டில் அமைதியும், நலமும் ஏற்பட வேண்டி கூட்டுப் பிரார்த்தனையில் ஈடுபடும் நடவடிக்கைகளில் காரை நகர்ப்பகுதி மக்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

காரைநகர் பத்தர் கேணிப்பிள்ளையார் ஆலயத்திலும், மணற்காட்டு மாரியம்மன் கோவிலிலும் சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து கூட்டுப்பிரார்த்தனைகள் இடம்பெறும். இதைத் தொடர்ந்து இப்பகுதி ஆலயங்களில் தினமும் கூட்டுப்பிரார்த்தனைகள் நடத்தப்படும்.

---

### அகதிகள்

[சுழிபுரம்]

சுழிபுரம், பொன்னாலை, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் இருநூற்றுக்கு அதிகமான அகதிகள் வந்துள்ளனர் இவர்கள் யாவரும் காரைநகர் பகுதியிலிருந்து வந்தவர்களாவர்.

சுழிபுரம் ஆறுமுகவித்தியாசாலை பொன்னாலை வரதராசப் பெருமான் வித்தியாசாலை, வட்டு. திருஞானசம்பந்த வித்தியாசாலை ஆகிய இடங்களில் இவர்கள் தங்கியுள்ளனர். இவர்களுக்கு உணவுகளை வழங்குவதில் இப்பகுதி மக்கள் உதவுகின்றனர்.

0 0 0

[வேலணை]

காரைநகரில் இடம் பெற்ற தாக்குதலைத் தொடர்ந்து காரைநகர்' பருத்தியடைப்பு ஆகிய பகுதிகளிலிருந்து பெருந்தொகையானோர் அகதிகளாக வேலணை, சரவணை பகுதிகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

வேலணை சாட்டி மாதா கோவில், வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மகா வித்தியாலயம், வேலணை கிழக்கு மகா வித்தியாலயம், வேலணைதுறையூர்ஐயனார் வித்தியாசாலை, சரவணை சின்னமடு, சரவணை நாகேஸ்வரி ஆகிய பாடசாலைகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

★ 'நாஸிகள் - யூதர்களை ஒப்பிட்டமை'

# அதிபர் ரீகன்மீது இஸ்ரேலியர்கள் பெரும் ஆத்திரம்!

ரெல்அவிவ், மே 9

**மேற்கு ஜெர்மனியில் இரண்டாம் உலகப் போரின்போது கொல்லப்பட்ட யூத மக்களையும், ஹிட்லரின் நாஸி இராணுவத்தினரையும் ஒன்றாக ஒப்பிட்டு அமெரிக்க அதிபர் ரீகன கருத்து வெளியிட்டுள்ளமைக்கு இஸ்ரேலிய அரசு கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளது.**

இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் திரு. யிட்ஷாக் ராபின் இதுகுறித்து கருத்து வெளியிட்டிருப்பதாவது: "திரு. ரீகன் நாஸிகளையும், யூதர்களையும் ஒப்பிட்டதை இஸ்ரேலியர்கள் ஒருபோதும் மன்னிக்கமாட்டார்கள்".

திரு. ரீகன் கடந்த வாரம் மேற்கு ஜெர்மனியிலுள்ள 'பிட்பேர்க்' மயானத்துக்குச் சென்றார். அங்கே சுமார் 50 ஹிட்லரின் நாஸி இராணுவத்தினரின் புதைகுழிகளுக்கு அவர் அஞ்சலி செய்தார்.

இதன்பின்னர் அவர் கருத்து வெளியிடுகையில், "ஹிட்லரின் இந்த நாஸி இராணுவத்தினர் மிகவும் இளம்வயதினர். பலவந்தமாக கடமையில் ஈடுபடுத்தப்பட்டவர்கள். இந்த அப்பாவிகளின் மரணங்களும் ஹிட்லரின் சித்திரவதைக்கூட யூதர்களின் மரணங்களும் சமமான தன்மையுடையவையே" என்றார்.

இதனையடுத்தே இஸ்ரேல் அரசாங்கமும், மக்களும் கொதித்தெழுந்துள்ளனர். சித்திரவதைக்கூடங்களில் மிருகங்களைவிடக் கேவலமானமுறையில் யூதர்கள் கொல்லப்பட்டனர். இதற்கு நாஸித் துருப்புக்களே பொறுப்பாவர்.

ஆனால் ஜெர்மன் வீழ்ச்சியடைந்ததும் நாஸிகள் சுடப்பட்டனர்.

இத் துருப்புக்களின் மயானத்துக்கே ரீகன் சென்று மேற்கண்ட கருத்தையும் வெளியிட்டிருந்தார்.

"யூதர்களின் நெருங்கிய நண்பரான திரு. ரீகன் நாஸிகள் பற்றிக் கூறியிருப்பது மிகவும் அதிர்ச்சியைத் தருகிறது" என்று இஸ்ரேலிய பிரதமர் சிமொன் பெரெஸ் கூறியுள்ளார். [கி]

## பி. டி. ஐ: மற்றுமொரு சோதனை!

(கொழும்பு)

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கிரட் தட்சர் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபோது ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன நிகழ்த்திய ஒரு உரையை திரித்து செய்தி வெளியிட்டதாக கொழும்பிலுள்ள பி டி ஐ நிருபர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது என்று அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்,

"சட்ட நடவடிக்கை எடுக்கும்வரை நாட்டைவிட்டு வெளியேற அனுமதிக்கப்படமாட்டார்' என்று தெரிவித்த அமைச்சர், "குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் சிறைத்தண்டனை வழங்கப்படும்" என்று கூறினர்.

## இரண்டாவது உலக யுத்தத்தின் 40வது ஆண்டு நிறைவை

### ஐரோப்பிய நாடுகள் கொண்டாடின

(மாஸ்கோ)

இரண்டாவது உலக மகா யுத்தம் நடைபெற்ற 40-வது ஆண்டு நிறைவை சோவியத் யூனியன் உட்பட பல ஐரோப்பிய நாடுகள்நேற்றுமுனதினக் கொண்டாடின.

நாற்பது ஆண்டுகளுக்கு முன் இந்நாளில்தான் 5 கோடி மக்களைப் பலி கொண்ட அந்த மாபெரும் யுத்தம் சோவியத் யூனியன் உட்பட பல ஐரோப்பிய நாடுகளில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன

இந்தநாளை நினைவுகூரும்முகமாக சோவியத் தலைவர் திரு. மிக்கையில் கோபர்சோவும், பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாக்ரெட் தட்சரும் பரஸ்பரம் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்,

இது குறித்து சோவித் தலைவர் விடுத்த செய்தியில், "போர் தொடங்குவதற்கு முன்பே அது தடுக்கப்படவேண்டும் என்பதனை 40 ஆண்டுகளுக்கு முன் நடந்த இந்தப்போர் நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகிறது. எதிர்காலத்தில் பூமியிலும், விண்வெளியிலும் அணு ஆயுதங்கள் பாவிக்கப்படுவதினைத் தடைசெய்வதன் மூலம் உலக மக்களை அழிவிலிருந்து காப்பாற்றமுடியும்.

உலகில் தொடர்ச்சியான அமைதியைப் பேணுவதற்கு சோவியத் யூனியன் என்றுமே தயாராகவுள்ளது" என்றும் அவர் தெரிவித்தார்.

## ஓவியங்கள் பிரதிஷ்டை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிச் சித்திர ஆசிரியர் திரு. செ. சிவப்பிரகாசத்தின் ஆக்கமான விநாயகப் பெருமானின் 32 தோற்ற வண்ண ஓவியங்களின் பிரதிஷ்டை கடந்த திங்கட்கிழமை அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனை, பஞ்சமுக அர்ச்சனைகளின் பின் நடைபெற்றது.

ஆலய தர்மகர்த்தாக்கள் சபைத் தலைவர் திரு. ச. நாகநாதர் தலைமையில் கலைச்செல்வி அப்பாக்குட்டி தங்கம்மா 'கணபதி' என்றநூலில் விபரிக்கப்பட்ட விநாயகப் பெருமானின் 32 தோற்றங்களையும் வர்ணித்துப் பேருரை நிகழ்த்தினர்

சிற்பிசிவப்பிரகாசம் பயின்ற சினன் கலட்டி ஞானோதயக் கல்லூரித் தலைமையாசிரியர் திரு.வை. நடராசா பாராட்டுரை வழங்கி பொற்பதக்கம் அணிவித்து கௌரவித்தார்

யாழ்ப்பாண மாவட்ட சித்திரப் பரிசோதகர் திரு ஆ. தம்பித்துரை சிற்பங்களின் கலைச்சிறப்பையும் அவற்றை ஆக்கிய சிற்பி சிவப்பிரகாசத்தின் ஆற்றலையும் வியந்து பாராட்டுரை கூறினர்.

அருட்கவி சீ. விநாசித்தம்பி 'சித்திர வாருதி சிவப்பிரகாசம்' எனப் பட்டமளித்துப் பாராட்டினர்.

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் வருடாந்தப் பொது கூட்டம் இம்மாதம் 14ம் திகதி காலை யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டத்துக்கான ஏற்பாடுகளையும் மேற்படி சங்கத்தின் காரியதரிசி திரு. அல்பேட் சந்தியாப்பிள்ளை செய்துள்ளார்.

இச்சங்கம், யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே வருடாந்தம் நடாத்திவரும் 15—17 வயதுக்குட்பட்டவர்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியும் இம்மாத இறுதியில் நடைபெறவிருப்பதாகத் தெரிய வருகிறது. (வி)

## இன்றைய பலன்

மாதம்: சித்திரை
திகதி: 28 (10-5-1985)
வாரம்: வெள்ளி

திதி: ஷஷ்டி பிற்பகல்வரை நக்ஷத்திரம் - உத்தராடம் முன் இரவு வரை

மேடம்: அன்னைவழி ஆதரவும் அன்பர்களின் உதவியும் உண்டு. இயந்திரங்களுடன் பழகுபவர்கள் இன்று அவதானம் வேண்டும்.

இடபம்: கலைஞர்களுக்கு கனகுஷியான தினம். வித்தையிலும் விபரீதங்கள் தோன்றக் கூடும். இன்று செய்காரியத்தில் கவனம் வேண்டும்.

மிதுனம்: இன்று இல்லத்தில் இன்னல்களுக்கு இடமுண்டு மறைமுக சதித்திட்டங்கள் உருவாகும். கவனம் வேண்டும்.

கடகம்; குடும்பத்தில் சோர்வு தென்படும். இல்லத்திலும் சச்சரவிற்கு இடமுண்டு இன்று எவ்விடயத்திலும் சிந்தித்து செயல்படவும்.

சிங்கம்: ஆயுதங்களுடன் பழகுபவர்கள் இன்று அவதானம் வேண்டும். எம்முறையோர்களானாலும் நம்பி நடக்கக் கூடாவாம்

கன்னி: பொதுப் பணிகளில் ஆர்வமும் பெரியோரின் ஆசியுமுண்டு. பிதாவழிச் சுகக் குறைவிற்கும் இடமுண்டு.

துலாம்: தொழிலில் மந்த நிலை தோன்றும் எதிர்பாராத வரவிற்கும் இடமுண்டு பங்காளிகளுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம்.

விருச்சிகம்: குடும்பத்தில் அமைதி குன்றும். மூத்த சகோதரத்தால் கவலைக்கிடமுண்டு.

தனுசு: உங்கள் விடயங்களில் பிறர் தலையீடு தவிர்க்கப்படல் வேண்டும். எக்காரியம் மேற்கொள்வதாயினும் நம்பிநடக்கக் கூடாவாம்.

மகரம்: உடல்நலம் குன்றும். நூதன ரோகத்திற்கும் இடமுண்டு. உணவுவிடயத்தில் சுகாதாரம் வேண்டும்.

கும்பம்; எதிர்பார்த்த வரவிற்கும் இடமுண்டு. வெளியிடத்துக் செய்திகள் பெருகும். சினேகித வழியாலும் வரவும் உண்டு.

மீனம்: சகோதரவழி சுகக் குறைவும் உண்டு. சரீரசுகக் குறைவும் உண்டு முயற்சியில் உயர்ச்சி உண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

## புதுடில்லியில் ஆஸ்திரேலிய அமைச்சர் கருத்துக்கு இலங்கை ஆட்சேபம்!

[கொழும்பு]

ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் திரு. வில்லியம் ஜோர்ஜ் ஹெய்டன் இலங்கை விவகாரம் குறித்து புதுடில்லியில் வெளியிட்டுள்ள கருத்துக்கு இலங்கை அரசு கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

இலங்கை இனப் பிரச்னை தமது அரசுக்கு கவலைதருவதாகவும் இலங்கையில் மனித அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டுமெனவும் திரு. ஹெய்டன் கூறியிருந்தார்.

இலங்கை பிரதி வெளிநாட்டமைச்சர் திரு டிரோன் பெர்னாண்டோ இக் கருத்துக் குறித்து இலங்கை அரசின் கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

அவர் இலங்கையிலுள்ள ஆஸ்திரேலிய ஸ்தானிகராலயத்துடன் தொடர்புகொண்டு இலங்கையின் கண்டனத்தை வெளியிட்டார், கூடவே திரு. ஹெய்டனின் கருத்தை ஆராயும்படியும் அவர் பணித்துள்ளார்.

இதேவேளை இலங்கையின் பல சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஹெய்டனின் கருத்தை ஆட்சேபித்துள்ளார்கள். (கி)

## நியமனம்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் ரி பகீரதன் எதிர்வரும் ஜூலை மாதம் தொடக்கம் வலயத் தலைவராக 306 -பி- மாவட்ட ஆளுநரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

## தபாலகத்தை மீண்டும் திறக்க நடவடிக்கை

(மட்டுவில்)

சாவகச்சேரி தபால்நிலையம் இயங்காது வேலைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன. இதை மீண்டும் இயங்கச் செயவதற்கான நடவடிக்கையில் சாவகச்சேரி தபால்நிலைய விழிப்புக்குழு தீவிர முயற்சியில் ஈடுபடடுள்ளது.

சாவகச்சேரி தபால்நிலையத்தை மீண்டும் வழமைக்குக் கொண்டுவருவது பற்றி பொதுமக்களைக் கொண்ட ஆலோசனைக் கூட்டத்தை விழிப்புக்குழு இம்மாதம் 12ம் திகதி காலை சாவகச்சேரியில் தபால்நிலைய முன்றலில் நடத்தும்.

## தபால் சேவை பாதிப்பு

[பண்டத்தரிப்பு]

வடதராநதிய போக்குவரத்து சபையின் பஸ்வண்டிகள் டீசல் தட்டுப்பாட்டினால் சேவையாற்ற முடியாத நிலையில் இருந்துவருவதன் காரணமாக யாழ் மாவட்ட தபால் சேவையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மெயில் பஸ் வண்டிகள் ஓடாததினால் இப்பகுதி தபால் நிலையங்களுக்கு தபால்கள் வந்து சேர்வதுலும் இங்கிருந்து தபால்களைக்கட்டி அனுப்புவதும் பாதிக்கப்பட்டுள்ளது. கடிதங்கள் அனுப்புவதற்கு மாற்று ஒழுங்குகள் செய்யப்படவேண்டும் என்று பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். (கி)

## கடன் தொல்லை: விவசாயி உயிரைப் பறித்தது!

[மாவிட்டபுரம்]

தோட்டத்தில் நஷ்டம் ஏற்பட்டு கடன் தொல்லைகள் அதிகரித்தமையால் மனமுடைந்த இளம் விவசாயி ஒருவர் நஞ்சருந்தி உயிரைப் போக்கிக் கொண்டார்

மல்லாகத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி சண்முகநாதன் 24 வயது] என்பவரே இவ்வாறு மரணமானர்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராஜா இம்மரணம்குறித்து விசாரணை நடத்திய சமயம் காலமானவரின் சகோதரர் சி. தெய்வேந்திரம். சாட்சியமளிக்கையில்: காலமானவர் தோட்டத்தில் நஷ்டம் ஏற்பட்டு கடன்தொல்லை அதிகரித்தமையால் மனமுடைந்திருந்தார் எனவும், தாயாரிடம் அவர் பணஉதவி கேட்டபோது தாயாரும் கையைவிரித்ததால் அவருடன் தர்க்கப்பட்டாரெனவும்,பின்னர் நஞ்சருந்தி மரணமானாரெனவும் கூறினர்.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை அதிகாரி திருமதி உக்கிரபெருவழுதிப்பிள்ளை பிரேத பரிசோதனை செய்து சாட்சியமளித்தார் இறுதியில் தற்கொலையென தீர்ப்பளிக்கப்பட்டது.

மல்லாகம் கிராம சேவையாளர் மூத்ததம்பி சிவலிங்கம் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

**லதா மினி**
(கோண்டாவில்)
தினசரி 10-30, 2-00, 4-00
I SPIT ON YOUR GRAVE
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

**முருகன் மினி**
இருபாலைச்சந்தி
தினசரி 10-30, 2-00, 4-30
9 முதல் 10 வரை
கொலுசு
11 முதல் 12 வரை
சுமதி என் சுந்தரி

**ஹரன் சினிமா**
தினசரி 10-30 — 2-30
250 நாட்களுக்குமேல் காட்டியளித்த வெற்றிச் சித்திரம்
மோகன் - பூர்ணிமா
விதி
(கலர்)

**ராஜா தியேட்டர்**
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-00
கமலஹாசன்- ஜெயபிரதா மஞ்சுபார்கவி
சலங்கை ஒலி
(ஈஸ்ட்மன் கலர்)
1984ம் ஆண்டின் மிகச்சிறந்த படம்

**றீகல்**
தினசரி 10-30, 2-00
பாண்டியன், ரேவதி நடித்த
பாரதிராஜாவின்
புதுமைப் பெண்

றீகல் மினி
10-30, 2-00 மட்டும்
CRVEL PASSION
(மிகக் கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

**லிடோ சினிமா**
"You dont Assign; You Unleash Him"
Staring
Kenwahl-Alberta Watson
in
"THE SOLDIER"

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2.30
ரஜனிகாந்த் - மாதவி நடித்த
தில்லு முல்லு
(ஈஸ்மன் கலர்)

**வின்ஸர்**
தினசரி 10-30, 2-00 4-15
Burt Reynolds
in
BEST FRIENDS
காதலர் இருவர் வாழ்க்கை மர்மத்தைச் சித்தரிக்கும் ஓவியம்.

**யாழ். வின்ஸர் மினி**
தினசரி: 10-30, 2-30
7 — 9
ரஜனி, ராதா, பாலாஜி, ஜெய்சங்கர் நடித்த
இரும்புக் கை


# விளையாட்டுக்கள் ஒற்றுமையை வளர்க்கின்றன

[சாவகச்சேரி]

"மனித சமுதாயத்திற்கு விளையாட்டு மிகவும் முக்கியமானது. விளையாட்டுக்கள் கட்டுப்பாடு, ஒழுங்கு, ஒற்றுமை ஆகியனவற்றை மனிதனுக்குப் போதிக்கின்றது."

இவ்வாறு கைதடி நவபுரத்தில் நடைபெற்ற நவசன சமூக நிலைய இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய அறவழிப் போராட்டக் குழு செயலாளர் வி எஸ். துரைராஜா குறிப்பிட்டுள்ளார்.

நிலையத்தலைவர் கி. கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டியை நிலையத்தின் முன்னாள் தலைவர்களான கு. கார்த்திகேசு, நா மாணிக்கம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தனர்.

துரைராஜா அங்கு மேலும் பேசுகையில்:-

நாட்டில் நிலவும் பதற்றமான சூழ்நிலையிலும் எமது கலாசாரங்கள் பண்பாடுகள் அழிந்துபோகாவண்ணம் பார்த்துக் கொள்வதற்கேற்ற முயற்சியில் இச் சனசமூக நிலையம் முன்னிற்பதைப் பாராட்டுகிறேன் என்றார்.

சின்னத்தம்பி, நடேசன் கிய இல்லங்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் நடேசன் இல்லம் வெற்றிபெற்றது.

சிறந்த விளையாட்டு வீரனாக சி. மன்மதராசாவும், சிறந்த வீராங்கனைகளாக செ. சுபதீஸ்வரியும், சி. சரோஜினி தேவியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## விளையாட்டுப் போட்டி

(வவனியா)

வவனியா-பூவரசங்குளம் வித்தியாலய வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டியில் எல்லாளன் இல்லம் முதலிடத்தினையும் பண்டாரவன்னியன் இல்லம் இரண்டாம் இடத்தினையும் மூன்றும் இடத்தினை சங்கிலியன் இல்லமும் பெற்றது.

பாடசாலை அதிபர் திரு க. சிவாசகம் தலைமையில் இப் போட்டி இடம் பெற்றது.

செட்டிகுளம் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ் அருளானந்தம் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.


**மொடேர்ன் மினி சினிமா**
(ஸ்ரீலங்கா அச்சக லேன் ராஜா தியேட்டருக்கு அருகாமையில்)
10-5-85 முதல்
DRUNKAN MASTER
நகைச்சுவை நிரம்பிய
கராட்டி சண்டைப்படம்
பாலர் முதல் பெரியோர் வரை கலகலப்பாக
புத்தம்புதிய படப் பிரதியில்
பார்த்து மகிழலாம்.
தினசரி 3 காட்சிகள்

**ஸ்ரான்லி மினி**
(சினிமா)
10-30, 2-30.
ரஜனிகாந், ராதா, V. K. ராமசாமி நடித்த
நான் மகான் அல்ல
(கலர்)
5'X5' திரையில்

**ஆனந்தி வீடியோ சினிமா**
[மனோகராவில்]
10-30 காட்சி மட்டும்
ரகு, ராணி நடிக்த
குயிலே குயிலே

**S. T. L. மினிசினிமா**
(திருநெல்வேலி)
மு. ப 10-30 பி. ப 2-00
ரவீந்தர், சரிதா, அசோக், பாலச்சந்திரன் நடித்த
கல்யாண அகதிகள்
(இந்தியாவில் வெற்றி முரசு கொட்டி ஓடிக்கொண்டிருக்கின்றது)

4-30 P. M.
EAGLE ATTACK AT TOWN


## சேவைநலன் பாராட்டுவிழா

(மண்டைதீவு)

மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் சுமார் 30 வருடங்கள் சேவையாற்றி ஓய்வு பெறும் திருமதி அருந்ததி சிவசுப்பிர்காசம் ஆசிரியைக்கு சேவைநலன் பாராட்டுவிழா வொன்று அண்மையில் நடைபெற்றது.

ஆசிரியையின் சேவையைப் பாராட்டி கல்லூரி அதிபர் திரு சு. சண்முகநாதன், ஆசிரியர்கள் திரு. எம். ஜி நடராசா திருமதி. அ. குணரட்ணசிங்கம், திருமதி பி எவ் அல்பிரட் சின்னத்துரை, திருமதி கணேசபிள்ளை, திரு சென்றேச், மன்றத்தலைவி, செல்வி ச. ஜீவமணி, மாணவர்கள் பலரும் உரையாற்றினர். இறுதியில் மன்றச்செயலாளர் செல்வன் க பரணிகரன் நன்றியுரையாற்றினர்.

## காண்பதற்கரிய மனிதர்

"நல்லார் ஒருவர் உளரேல், அவர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை" எனப் பிறிதோர் கோணத்திலிருந்து எம் பைந்தமிழ் அறிஞர் என்றோ திருவாய் மலர்ந்தருளியுளர்!

இவற்றுக்கு உதாரணமாக உள்ளவர்களை எம் இனத்தில் இலைமறைகாய் போல் அங்கொருவராக, இங்கொருவராக வாழ்ந்த, இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற உத்தமர்கள், இவ்வரிசையில், எம் இதயத்தில் உவப்பான, இனிய இடத்தில் அரியாசனம் வகித்த ஒருவர் தமது தொண்ணூற்றியிரண்டாவது வயதில் "பொன்னார் மேனியனின்" திருவடியைச் சென்றடைந்து பேரின்ப வெள்ளத்தில் சாந்தியடைந்துள்ளார்!

அனலைதீவுக் கிராமத்தின் சிறப்புக்கு அணிகலனாகவிருந்த பெரியோர்களில் ஒருவராகிய சைவ வயித்தியநாதர் ஐயம்பெருமாள் செந்தமிழும் ஆங்கிலமும் சீர்பெறக்கற்று, மலாய் நாடு சென்று தனியார் பெருந்தோட்டத் துறையில் பொறுப்புமிக்க நிர்வாகப் பதவியை பலகாலம் வகித்துப், பெறற்கரிய பேறு பலதும் பெற்று, இரண்டாவது உலக மகாயுத்தம் முடிவடைந்ததும் தாய்நாடு திரும்பி தம் கிராமத்தின் பொதுப்பணிகள் பல ஆற்றினர்.

அவர் அருமையான, அரிய இனிய மனிதன்; பழங்கால உலகின் பக்குவமும், இக்கால உலகின் நவீனமும் அவரை அலங்கரித்தன அன்பு, அடக்கம், அறிவு, பரிவு, நேர்மை, நிதானம், உயர்ந்த உறுதியான கொள்கை ஆகியன மேலும் அவரின் ஆளுமையை அணி செய்தன அவர் போன்ற மனித உருவங்களை இன்று காண்பதரிது!

— த. ந.பஞ்சாட்சரம்

# "முகவர் நிலையங்கள் அரசுடமை ஆக்கப்படவேண்டும்"

## 'சரத்' கருத்து

(கொழும்பு)

"நாட்டிலுள்ள அனைத்து வெளிநாட்டு முகவர் நிலையங்களும் உடனடியாக அரசு உடைமையாக்கப்படல் வேண்டும்" என்று கலவான எம் பி. திரு. சரத் முத்தேட்டுவகம நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில், "இந்த நடவடிக்கைகள்மூலம் இலங்கையரை வெளிநாட்டுக்கு 'விற்பனை' செய்வதில் ஏற்படும் மோசடிகளைத் தடுத்து நிறுத்தலாம்" என்றும் தெரிவித்தார்.

# கொட்டடியில் மக்கள் வெளியேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கொட்டடியிலுள்ள வடக்குப் பகுதியில் வசித்த மக்களில் பலர், பதட்டநிலையால், பாதுகாப்பான இடங்களை நாடிச் செல்லத்தொடங்கியுள்ளனராம்.

அடிக்கடி இடம்பெறும் குண்டுவெடிப்பு, துப்பாக்கி வெடிச் சத்தங்களால் பீதியடைந்தே அவர்கள் வேறிடங்களை நாடிச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதியில் உள்ள பல வீடுகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன. (மா)

# தொழிலதிபர் நடேசன் சென்னையில் காலமானர்

(கொழும்பு)

பிரபல தொழிலதிபரும், வீரகேசரி பத்திரிகையை வெளியிடும் எக்ஸ்பிரஸ் நியுஸ் பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட் ஸ்தாபனத்தின் முன்னாள் இயக்குனர் சபைதலைவருமான திரு. ஆர் ஏ. நடேசன் தமது 80 வது வயதில் சென்னையில் காலமானர்.

தேயிலைத்தோட்டத் துறையிலும், அச்சகத்துறையிலும், நீண்டகாலமாக ஈடுபாடு கொண்டிருந்த இவர் தேயிலை சபை அங்கத்தவராகவும் இருந்திருக்கிறார். பொதுசேவைகளுக்காக திரு. நடேசனுக்கு 1952ல் பிரித்தானிய அரசு ஓ பி ஈ. பட்டம் வழங்கி கௌரவித்தது சுதந்திர போராட்ட காலத்தில் மகாத்மாகாந்தி நேரு மற்றும் தலைவர்களுடன் தொடர்பு கொண்டிருந்ததோடு அரசியலிலும், ஈடுபாடுகொண்டிருந்தார்.

## ரூபவாஹினி

மாலை

5-00 செய்திகள்

5-05 'வூடி வுட்பெக்கர்'

5-30 'மலரும் அரும்புகள்' சிறுவர் நிகழ்ச்சி (தமிழ்)

6-00 விலங்கியல் பற்றிய சித்திரம்

6-30 செய்திகள் (தமிழ்)

6-55 'மன்னி' ஜெர்மன் உதைபந்தாட்ட வீரரொருவனை பின்னணியாகக் கொண்ட சித்திரம்.

7-30 ஒரு யூகோஸ்லாவிய கவிஞனின் பேட்டி

8-00 செய்திகள் (சிங்களம்)

8-30 சிறுவர் நாடகம் (சிங்களம்)

9-00 செய்திகள் (ஆங்கிலம்)

9- 0 சிங்கள நிகழ்ச்சி,

9 40 செக்கோஸ்லாவாக்கிய திரைப்படம்

## இன்று..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களைப்பூட்டி, பூரண பகிஷ்கரிப்பு நடத்த வேண்டுமென்று யாழ் வர்த்தக சங்கம் தீர்மானித்துள்ளது.

இன்று வெள்ளிக்கிழமைக்குள், வர்த்தக சங்க தலைவர் திரு எஸ் வி முருகேசு விடுதலை செய்யப்படாவிடில் அவர் விடுதலை செய்யப்படும் வரை கடைகளைப் பூட்டி தொடர்ந்து பகிஷ்கரிப்பு செய்வதென்று சங்கம் முடிவு செய்துள்ளது.

யாழ் வர்த்தக சங்க செயலாளர் திரு வி நமசிவாயம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது

வர்த்தகர்களாகிய நீங்கள் கடத்திச் செல்லப்பட்டுதடுத்து வைத்திருக்கும் நிலை தொடராமல் தடுக்க உங்கள் ஸ்தாபனங்களைபூட்டி உங்கள் வன்மையான எதிர்ப்பினை ஒற்றுமையாக எல்லோரும் உணரக் கூடியவிதத்தில் நாம் செய்து காட்டவேண்டும். வர்த்தகர்களின் ஒற்றுமை சம்பந்தப்பட்டோரை சிந்திக்கச் செய்ய வேண்டும். ஆகவே பகிஸ்கரிப்பு பூரணமாக வெற்றிபெற உங்கள் எல்லோருடைய ஒத்துழைப்பையும் பூரண வேண்டுகின்றோம்." [க]

## 3 தாக்குதல்கள்...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

களால் தொடுக்கப்பட்ட தாக்குதலை பாதுகாப்பு படையினர் வெற்றிகரமாக முறியடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

புல்டோசர்கள், கவசவாகனங்கள் அகியவற்றை பயன்படுத்தி தொடுக்கப்பட்ட இத்தாக்குதலில் ஒரு இராணுவ வீரர் கொல்லப்பட்டதாகவும, சிலர் காயமடைந்துள்ளதாகவும் அரசு அறிக்கை கூறுகிறது தீவிரவாதிகளில் எட்டுப்பேர் இறந்துகிடக்கக் காணப்பட்டதாகவும், அவர்களுக்கருகில் ஆயுதங்கள் காணப்பட்டதாகவும் அந்த அறிகைை மேலும் தெரிவித்தது.

இது இவ்வாறிருக்க வல்வெட்டித்துறைப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கவசவாகனம் ஒன்று, தீவிரவாதிகளால் வைக்கப்பட்ட தரை கண்ணி வெடிக்கு இலக்கானதின் நிமித்தம் ஒரு இராணுவ வீரர் கொல்லப்பட்டுள்ளார் என்றும் இதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒன்பது தீவிரவாதிகள் கொலலப்பட்டதாகவும் அரசு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

கரவெட்டியில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது வீசப்பட்ட கைக்குண்டு வெடித்து ஒரு இராணுவ அதிகாரி ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும், சிலர் காயமடைந்ததாகவும் அரசு அறிக்கை மேலும் கூறியது. (ரா)

# கொழும்பு புறப்பட்ட பஸ்கள் பளையுடன் திருப்பப்பட்டன

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரிலிருந்து நேற்றுக் காலை கொழும்பு புறப்பட்ட மூன்று தனியார் பஸ்கள் மீண்டும் யாழ். நகர்வந்து சேர்ந்தன.

இந்த பஸ்கள் உட்பட சகல வாகனங்களும் பளையில் வைத்து திருப்பிவிடப்பட்டதாக கூறப்படுகிறது.

முறிகண்டிப்பகுதியில்பதற்ற நிலை ஏற்பட்ட காரணத்தினால் பஸ்கள் திருப்பிவிடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

வ. பி. போ. ச. பஸ்ஸோ மினிபஸ்களோ எதுவும் பளைக்கப்பால் செல்லவில்லை எனக் கூறப்படுகிறது.

கொழும்பிலிருந்துவந்த தனியார் பஸ்கள் உட்பட சகல வாகனங்களும் வவனியாவில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வவனியா ரயில் நிலையத்தில் வந்திறங்கிய யாழ்ப்பாணம் வரவேண்டிய பிரயாணிகளில் சிலர் தனியார் பஸ் மூலம் நெடுங்கேணி - முல்லைத்தீவூடாக நேற்று மாலை வந்து சேர்ந்தனர்.

மற்றைய பிரயாணிகள் வவனியா புகையிரத நிலையத்தில் பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# போக்குவரத்துச் சேவை ஸ்தம்பிக்கும் நிலை!

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் எரிபொருள் தட்டுப்பாட்டால் சகல அத்தியாவசிய போக்குவரத்துச் சேவைகளும் ஸ்தம்பிக்கும் சூழ்நிலை உருவாகிவருகிறது.

இதுவரை காலமும், வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்கு பாதுகாப்புடன் டீசல் வழங்கப்பட்டு வந்தது அத்துடன் குறிப்பிட்ட சில எரிபொருள் நிலையங்களுக்கும் எரிபொருள் வழங்கப்பட்டது. நேற்று முன்தினம் தொடக்கம் பாதுகாப்புடன் எரிபொருள் வழங்குவது மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

வடபிராந்திய போக்குவரத்துச்சபை தமது பஸ் சேவையை எரிபொருள் தட்டுப்பாட்டால் மட்டுப்படுத்தியபோதிலும், மேற்கொண்டு முழுமையான சேவையை நடத்தநடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டது

கிளிநொச்சியிலுள்ள எரிபொருள் விற்பனவு நிலையத்திற்குப் பஸ்களை அனுப்பி அதன் மூலம் எரிபொருள் பெற்றுப் போக்குவரத்துச் சேவையை முழுமையாக நடாத்த ஆலோசனை நடாத்திவருவதாக போக்குவரத்து சபை உத்தியோகத்தர் ஒருவர் தெரிவிக்கிறார். (மா)

## பஸ்சேவை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் டீசல் இல்லாததினால், நேற்றும் வ. பி. போ. ச பஸ் சேவை நடைபெறவில்லை.

பாடசாலை பஸ் சேவை மட்டுமே நடைபெற்றது. மினி பஸ் சேவையும் குறைவாகவே இருந்தது. [க]

## ஒருவர் பலி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மூளாயைச் சேர்ந்த சுப்பிரமணியம் நேசதுரை [32வயது] என்பவரே பலியானவராவார்.

யாழ் நகரில் வாடகைக்குக் காரோட்டி சீவியம் நடத்தும் இவர் நேற்று நண்பகல் மண்கும்பான் பிள்ளையார் கோவிலுக்குப் பக்தர்களை ஏற்றிச் சென்றுவிட்டு, யாழ். நகர் நோக்கி பண்ணைப் பாலம் ஊடாகவந்த பொழுது யாழ். அஞ்சல் தொலைதொடர்பு நிலையதுக்கண்மையில் துப்பாக்கி சூடுபட்டு ஸ்தலத்திலேயே பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பி ப. 1-30மணியளவில் துப்பாக்கிச்சூடுபட்டவர் 3மணித்தியாலம் வரை அக்காருக்குள்ளேயே கிடந்ததாகவும் பின்னர் யாழ். ஆஸ்பத்திரி அம்புலன்ஸின் உதவி மூலம் யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்று சடலம் பிரேத அறையில் வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவரது காரைப்பின் தொடர்ந்துவந்த மினிவான் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டதாகவும், சாரதி வேறு பாதையால் வானைச் செலுத்திச் சென்றதாகவும் அறியப்படுகிறது.

நேற்று நண்பகல் யாழ் நகரின் தெற்குப்பக்கமாக குண்டு வெடிச்சத்தங்களும் துப்பாக்கி வெடிச்சத்தங்களும் தொடர்ச்சியாகக் கேட்ட வண்ணமிருந்தன.

யாழ். பிரதம தபால் அலுவலகத்தில், அலுவல்கள நிமித்தம் வந்திருந்த மூளாயைச் சேர்ந்த உப-தபாலதிபர் ஐ. நடராசா என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மற்றும் தர்மகுலசிங்கம் (நல்லூர்), நவரட்ணம் ரவி [23-வயது] கோண்டாவில், உதயகுமார் (18 வயது) யாழ் ஆஸ்பத்திரி வீதி, சிவராசா (17-வயது) ஆகியோர் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் இருவர் யாழ் நகரிலுள்ள கடை ஒன்றுக்குள் வேலை செய்து கொண்டிருந்த பொழுது கூரை ஓட்டைப் பிய்த்து விழுந்த குண்டுகள் பட்டுக் காயமடைந்தனராம்.

பருத்தித்துறையைச்சேர்ந்த ரி. கணேசமூர்த்தி [20 வயது]. சாந்தராசா [19 வயது] ஆகியோரும், ஊர்காவற்றுறையைச் சேர்ந்த ஏ யோகநாதன் [32 வயது] என்பவரும் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [மா]

## கடும்சோதனை

(நெடுந்தீவு)

காரைநகர் சம்பவங்களையடுத்து நயினாதீவுப்பரிசோதனைப்பகுதியில் பரிசோதனைகள் தீவிரமடைந்துள்ளன.

நயினாதீவுதுறையில் கடற்படையினர் தினசரி சோதனைகளை நடத்துவதால் மக்கள் துன்பத்துக்குள்ளாக்கப் படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நெடுந்தீவு, நயினாதீவு செல்லும் பிரயாணிகளில் ஆண் பெண் இருபகுதியினரும் தனித்தனி பலத்தசோதனைக்குட்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தெற்காசிய பிராந்திய...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவுக்குப் பிடிக்கவில்லை. அமெரிக்கா நிர்ப்பந்தம் காரணமாகவே இலங்கை இந்த அமைப்பிலிருந்து விலக முடிவுசெய்துள்ளது'' என்றார்.

### லக்ஷ்மன் கருத்து

சர்வதேச மனித உரிமைகள் அமைப்பிலிருந்து இலங்கை விளகிக்கொள்ளுமா என்று அத்தனகல பாராளுமன்ற உறுப்பினர் திரு. லக்ஷ்மன்ஜெயக்கொடி நேற்று பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்!

இதுதொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு கலவான எம் பி பேசுகையில்; ஐ. நா அமைப்பு, அணிசேரா இயக்கம் என்பவற்றில் இருந்து இலங்கை விலகலாமே என்று கூறிய போது திரு. லஷ்மன் ஜெயக்கொடி குறுக்கிட்டு சர்வதேச மனித உரிமைகள் அமைப்பில் இருந்தும்இலங்கை விலகலாமே'' என்றார்.

### அரசு விளக்கம்

''தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பிலிருந்து வெளியேறுவதென அரசாங்கம் தீர்மானிக்கவில்லை'' என்றுபதில் வெளி விவகார அமைச்சர் திரு ஏ.சி.எஸ். ஹமீட் ...

திரு ரெரேன்பெர்னாண்டோ நேற்று பாராளுமன்றத்தில்தெரிவித்தார்.

இந்த அமைப்பின் மாநாடு எதிர்வரும் 13ந் திகதி பூட்டானில் ஆரம்பிக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது

## மத்திய கல்லூரி மாணவன் தினேஷ் உயிர்காக்கக் கோரிக்கை!

(யாழ்ப்பாணம்)

யாழ் மத்திய கல்லூரி மாணவன் தினேஷ் சோமசந்தரம் (15 வயது) தமிழ்நாட்டிலுள்ள வேலூர் கிறீஸ்தவ மருத்துவமனையில் சிறுநீரக மாற்றுச் சத்திர சிகிச்சைக்குள்ளாகியும் அது பயனளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது திரும்பவும் இவருக்குச் சத்திர சிகிச்சை செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அவருக்கு இப்பொழுது ''ஓ-நெகடிவ்'' இரத்தத் தொகுதியுடையவரின் ஒரு சிறுநீரகம் உடனடியாகத் தேவைப்படுவதாகவும், யாராகிலும் தானம் செய்யமுன் வந்து அவரின் உயிரைக் காப்பாற்றுமாறும் சன்மானம்பெற விரும்புவோருக்கு உரிய சன்மானம் வழங்கப்படும் என்றும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி எஸ். சோமசுந்தரம், இல; 19, சப்பல் வீதி, யாழ்ப்பாணம் என்றும் தினேஷின் தந்தை கோரிக்கை விடுத்துள்ளார்.

## 'ரெலோ' உரிமைகோருகிறது

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை கொக்காவில் இராணுவ முகாம்மீதான தாக்குதலை தாமேமேற்கொண்டதாக 'தமிழ் ஈழ விடுதலை இயக்கம்' (ரெலோ) உரிமை கோரி அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

'9ம் திகதி காலை 6-48க்கும் 7-55க்கு மிடையில் நேரத்தில் இத்தாக்குதல்இடம் பெற்றது என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது [மா]

## யாழ்.நகர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யாவும் நண்பகலுக்கு முன்னர் முடிந்துவிட்டன அரசாங்க ஊழியர்களும் நண்பகலுடன் சென்றனர்.

நண்பகலுக்குப் பின் வாகனங்கள் யாவும் வீதியில் காணப்படவில்லை. வீதியில் பிற்பகல் நடமாட்டம் காணப்படாமல் வெறிச்சோடிக்கிடந்தது.

பாடசாலைகள் தனியார்கல்வி நிலையங்கள் நண்பகலுடன்முடிவடைந்தன யாழ். ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பகுதியில் நண்பகலுக்குப் பின்னர் எவரும் காணப்படவில்லை

மரக்கறிச்சந்தை, மீன்சந்தை இறைச்சிக் கடைகள்யாவும் நண்பகலுடன்பூட்டப்பட்டன.

## கொக்குவில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவிலில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் யாழ். வீடமைப்பு அதிகார சபையில் கடமையாற்றும் ஞானசுந்தரம் ஜெகத்குமார் (26 வயது) என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டைதீவைச் சேர்ந்த இவர், கொக்குவிலில் விவாகம் செய்தவர் என்றும் ஒரு பெண் பிள்ளைக்குத் தந்தை என்றும் கூறப்படுகிறது. (மா)

## வவனியா வரை 'யாழ்தேவி'

[வவனியா]

கொழும்பிலிருந்து கிளிநொச்சி நோக்கி நேற்று வந்த 'யாழ்தேவி' ரயில் வவனியாவுடன் நிறுத்தப்பட்டது.

'யாழ்தேவி' நேற்று வவனியாவிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்டது.

## சுட்டுக் கொலை

[வவனியா]

வவனியாவிலுள்ள மாமடுவ என்ற இடத்தில் நேற்றிரவு ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

விஜேயசுந்தர (30 வயது) என்ற இந்த நபர் சூதாடிக் கொண்டிருந்த சமயம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தனிப்பட்ட பகைமை காரணமாக இவர் சுட்டுக்கொல்லப்பட்டதாகக்கூறப்படுகிறது.

## பி. டி ஐ. நிருபர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பி. டி ஐ நிருபர் திரு. ஆனந்த் நேற்றுகைது செய்யப்பட்டுக் கோட்டை மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்ட போது அவரை றிமாண்டில் வைக்குமாறு மாஜிஸ்ரேட் உத்தரவிட்டார். இச்சம்பவத்தைத் தொடர்ந்து நேற்று தாயகம் புறப்படவிருந்த திரு. சத்வால் தமது பயணத்தை ரத்துச் செய்ததுடன் நிருபர் மீதான இலங்கை அரசின் நடவடிக்கை குறித்து வன்மையாக ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

திரு. ஆனந்த் இரண்டுமாதங்களுக்கு முன்னரே கொழும்பு வந்திருந்தார். இவருக்கு முன்னர் இலங்கையில் கடமையாற்றிய பி. டி. ஐ. நிருபர் திரு. எஸ். தர்மராஜன் இலங்கை அரசினால் வெளியேற்றப்பட்டு அலுவலகமும் மூடப்பட்டது தெரிந்ததே.

## எங்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்தார்.

ஈராக் நாட்டின் வடக்குப் பகுதியில் 'குர்டிஷ்கான்' என்ற இன மக்கள் தமக்கு சுயாட்சி வேண்டி போராட்டம் நடத்தினர். இறுதியில் அவர்களுக்கு சுயாட்சி வழங்கப்பட்டது. அவர்கள் இப்போது பெரும்பான்மை இனத்துடன் சேர்ந்து ஈரானுக்கு எதிராக ஆயுதம் ஏந்தி போராட்டம் நடத்துகின்றார்கள்'' என்றார்.

# பூசகருக்கு ஆபத்து இல்லை தேங்காய் எடுப்பவரே பலி

(நமது கிளிநொச்சி நிருபர் கே, வி,கே. திருலோகமூர்த்தி)

முருகண்டியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அசம்பாவிதங்களில் பிள்ளையார் கோயிலுக்கோ அல்லது கோயில் பூசகருக்கோ எதுவித ஆபத்துமேற்படவில்லை. அவ்வாலயத்தில் தினமும் உடைக்கப்படும் 'வழித்தேங்காய்'களைச் சேகரிக்கும் நடுத்தர வயதுடைய நபர் ஒருவரே பலியானார்.

இதுதவிர, அவ்வேளை ஆலய தரிசனம் செய்தோர், மற்றும் அவ்விடத்தில் நின்றோர் உட்படப் பத்துப்பேர் வரை காயமடைந்தனர்.

இங்கு கடை ஒன்றில் வேலை பார்த்த சாவகச்சேரியைச் சேர்ந்த இரு சகோதரர்கள் படுகாயமடைந்தனர்.

இவ்வாறு சுமார் பத்துப் பேர் படுகாயமடைந்தனர்.

இதேநேரம் சம்பவத்தை அறிந்த கோஷ்டி ஒன்று ஸ்தலத்திற்கு விரைந்து குண்டுகள் வீசியதைத் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டோர் திருப்பிச்சென்றனராம்.

இது இவ்வாறிருக்க கிளிநொச்சி பால் சபைக்குச் செல்லும் வீதி, ஸ்ரேசன் வீதி ஆகியன கடந்த சில தினங்களாகப் போக்குவரத்துக்குத் தடைப்படுத்தப்பட்டுள்ளன.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு மே மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu P. O. Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-2412